ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2197/6 - 2020 ඔක්තෝබර් මස 13 වැනි අඟහරුවාදා - 2020.10.13

*2197/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPANN/LND/ACDEP/1/4/12.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2017/PC/63.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலாளர் பிரிவில், மெதபத்து கோறளே மேற்கு இங்கரதவுல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.07.21 ஆந் திகதிய இறுதிக் கிராம வரைபட இல. 341, தாள் இல. 8, பிற்சேர்க்கை இல. 8 இன் வரைபடத்தில் காட்டப்பட்ட 0.0253 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் :

*01.* **துண்டு இல. 130**

காணியின் பெயர் : இதிகஹவெல வத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், 35 - 40 வருட வயதிலான தென்னை மரங்கள் 23 உம், தென்னங் கன்றுகள் 8 மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை, நிலையான கட்டிடம் 3 உம், சீமெந்தினால் கட்டப்பட்ட ஒரு கிணறும் காணப் படுகின்றன; உரிமை கோருவோர் : காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.5939 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பன்னல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். எஸ். விக்ரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்,
பன்னல.

பிரதேச செயலகம்,
பன்னல,
2020, ஒற்றோபர் 07.

*10 - 1047*



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 3/7/16/2.
காணி அமைச்சின் குறிப்பு இல.: ஹ-4-3/4/2017/எல்ஓ/513.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், நுவரெலிய மாவட்டத்தில், வலப்பனை பிரதேச செயலகப் பிரிவின் ஓயப்பலாத்த கோரளை, 515 பீ, வலப்பனை கிராம அலுவலர் பிரிவில், வதுமுல்ல கிராமத்தில் உள்ள (ஆரம்ப வரைபட இல. 3362) கிராமத்தின் இடப்பரப்பை நில அளவையாளர் அதிகாரியினால் அளந்து 2020.06.08 ஆந் திகதிக்கு தயாரிக்கப்பட்ட மூல வரைபட அளவீடுகளின்படி 0.4446 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வரும் துண்டு இல. 01, 02 இல் காட்டப்பட்டுள்ளது:

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : முல்ஹல்கெலெ தோட்டம்; விபரம் : தோட்டம், தற்காலிக கலப்புப் பயிர்ச் செய்கை உண்டு; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.0322 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**

காணியின் பெயர் : முல்ஹல்கெலெ தோட்டம்; விபரம் : வீட்டுத் தோட்டம், மூன்று நிரந்தரக் கட்டிடம் மற்றும் தற்காலிக கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.4124 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வலப்பனை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. எச். சாலிய பண்டார,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை,
2020, ஒற்றோபர் 09.

10 - 1048